Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 306/2021 |
| Police station | : | |
| Deposition of witness for Prosecution | : | LW 1/ PW 1 |
| Name | : | விருதாம்பாள் |
| Father Name/Husband Name | : | பழனியாண்டி |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.06.2022.

**மு.வி.** நான் தற்போது சி.என்.பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் விபத்தில் இறந்துபோன பழனியாண்டி எனது கணவர் ஆவார். சாட்சிகள் சக்கரபாணி, சக்திவேல் ஆகியோரை எனக்கு தெரியும். சுமார் 3 வருடத்திற்கு முன்பாக 29 ம் தேதியன்று காலை சுமார் 7.00 மணியளவில் சி.என்.பாளையம் கால்நடை மருத்துவமனை அருகே தோப்பிற்கு செல்ல வேண்டி எனது கணவர் சென்றார். சுமார் 7.30 மணியளவில் கால்நடை மருத்துவமனைக்கு சென்ற சக்கரபாணி விபத்தை பார்த்துவிட்டு வந்து என்னிடம் தகவல் சொல்லி என்னை சம்பவயிடத்திற்கு அழைத்து சென்றார். நான் சம்பவயிடம் சென்று அடிப்பட்ட என் கணவரை பார்த்தேன். அதற்குள் 108 ஆம்புலன்ஸை வரவைத்தார்கள். அடிப்பட்ட கணவரை 108 ஆம்புலன்ஸ்ல் ஏற்றிக்கொண்டு சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அதன்பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக புதுச்சேரி கோரிமேடு மருத்துவமனைக்கு அழைத்து சென்று அவரை சிகிச்சையில் சேர்த்துவிட்டு, நடுவீரப்பட்டு காவல் நிலையம் வந்து விபத்து குறித்து புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு காவல் நிலையத்தில் என் கொழுந்தனார் மகன் மணிகண்டன் மூலமாக எழுதி என்னால்

கைக்குறியிட்டு கொடுக்கப்பட்டதுதான் **(கைகுறியுடன் கூடிய புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. அதன் பின்னர் கோரிமேடு மருத்துவமனையில் இருந்து மீண்டும் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து சிகிச்சையில் சேர்த்தேன். சிகிச்சையில் இருந்த கணவர் சிகிச்சை பலனின்றி கடலூர் அரசு மருத்துவமனையில் 07.03.2020 அன்று இறந்துவிட்டார். உடனே நான் தகவலை என் உறவினர்களிடம் சொன்னேன் அவர்கள் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள். என் கணவர் இறந்தது சம்பந்தமாக நடுவீரப்பட்டு போலிசார் மீண்டும் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 306/2021 |
| Police station | : | |
| Deposition of witness for Prosecution | : | LW 2/ PW 2 |
| Name | : | சக்கரபாணி |
| Father Name/Husband Name | : | ஆறுமுகம் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.06.2022.

**மு.வி.** நான் தற்போது சி.என்.பாளையம் சொக்கநாதன்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் நெசவு வேலை செய்து வருகிறேன். அசா 1 எங்கள் வீட்டிற்கு நான்காவது வீட்டில் இருப்பவர். இந்த வழக்கின் விபத்தில் இறந்துபோன பழனியாண்டி அசா 1 ன் கணவர் ஆவார். 29.02 அன்று வருடம் சரியான நினைவில்லை (சுமார் 3 வருடத்திற்கு முன்பாக) காலை 7.45 மணியளவில் நான் நடுவீரப்பட்டு to சாத்திப்பட்டு ரோட்டில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு செல்லவேண்டி ரோட்டின் இடதுபுற ஓரமாக நடந்து சென்றுக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு முன்பாக பழனியாண்டியும் நடந்து சென்றுக்கொண்டிருந்தார். அந்த சமையம் அதே ரோட்டில் வேகமாக எமகா 7569 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஆஜரில் இருக்கும் எதிரி ஆரண்அடிக்காமல் ஓட்டிசென்று பழனியாண்டியின் மீது மோதியதில் பழனியாண்டி ரோட்டில் தூக்கி எறியப்பட்டார். உடனே நான் அருகில் சென்று அவரை பார்த்தபோது கண் மற்றும் பின்னபக்க தலையில் அடிப்பட்டு கிடந்தார். பின்னர் நானும் பக்கத்தில் இருந்த நபரும் 108 ஆம்புலன்க்கு தகவல் சொன்னோம். தகவல் சொல்லிவிட்டு நான் பழனியாண்டியின் மனைவிக்கு நேரில் சென்று தகவல் சொல்லி அவரை சம்பவயிடத்திற்கு அழைத்து வந்தேன். பழனியாண்டியின் மனைவி

அடிப்பட்ட அவரை ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டு கடலூர் மருத்துவமனைக்கும், பின்னர் கோரிமேடு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் பழனியாண்டியின் உறவினரான மணிகண்டன் என்பவரை அழைத்து வந்து சம்பவயிடம் மற்றும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை காண்பித்தேன். அதன்பின்னர் அவர்கள் காவல் நிலையத்தில் விபத்து குறித்து புகார் அளித்தார்கள். கோரிமேடு மருத்துவமனையில் இருந்து மீண்டும் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். பழனியாண்டி கடலூர் அரசு மருத்துவமனையில் கடந்த 07.03.2020 அன்று இறந்துவிட்டார். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்தபோது விசாரணை செய்தார்கள். இந்த விபத்திற்கு ஆஜர் எதிரியின் அசட்டைதான் காரணம்.

**எதிரி ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**